முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை

முன்னிலை திரு. பா. கௌதமன், பி.ஏ., பி.எல்.,

முதன்மை சார்பு நீதிபதி.

வா.சா.1 நாள். 22.01.2020

| அ.வ.எண். | 53/2016 | | |
|---|---|---|---|
| பெயர் | ராஜ்மோகன் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

ஓஎஸ் 68/1948 வழக்கில் கணபதியாப்பிள்ளை அறக்கட்டளைக்கு உள்ள சொத்துக்கள் குறித்து கணக்கு காண்பித்தார் என்றாலும் அதன் அடிப்படையில் தான் திட்ட தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றாலும் சரிதான்.ஓஎஸ் 68/1948 வழக்கின் அலுவலக நகல் பிவாசாஆ 4. 1838 க்கு முன்புள்ள சொத்துவிபர பட்டியலை அசல் வழக்கு எண் 68/1948 வழக்கில் தாக்கல் செய்தாரா என்று எனக்கு தெரியாது. யார் வழக்கு தாக்கல்செய்ய வேண்டும் என திட்ட தீர்ப்பாணையில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த தீர்ப்பாணையின் படி அறக்கட்டளையின் மேலாளர் தான் வழக்கு தாக்கல் செய்ய முடியும் என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்ய அறக்கட்டளை தலைவருக்கு எந்த அதிகாரமும் இல்லை என்றால் சரியல்ல. இந்து அறநிலையத்துறை சட்டம் பிரிவு64 (5ஏ) வின் படி திட்ட தீர்ப்பாணையில் தலையிட அறநிலையத்துறைக்கு அதிகாரம் உள்ளது என்றால் எனக்கு தெரியாது. பிரதிவாதி கேட்ட கேள்விகளுக்கு பதில் அளிக்காமல் உண்மையை மறைப்பதற்காக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதியிடம் மேல்முறையீடு செய்ய வேண்டுமே தவிர உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தது நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. அறக்கட்டளைக்கு விரோதமாக திட்ட தீர்ப்பாணை பிறப்பிக்கப்பட்டது என்றால் சரியல்ல. நான்

கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும் அதனால் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றாலும் சரியல்ல. அதிகாரமுடைய நபர் இந்த வழக்கை தாக்கல் செய்யாததால் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.